# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515580

ஆணை நாள் 08.05.2026

முன்னிலை

**திரு.ரா.பிரியகுமார், பி.எஸ்.சி, பி.எல்.,**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 17722/B/2023**

திரு.M.ராஜசேகரன் — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
கோட்டப் பொறியாளர்,
நெடுஞ்சாலைத்துறை,
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு,
நாமக்கல் மாவட்டம் - 637001. — பொது அதிகார அமைப்பு

**ஆணை**

1. இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் 06.01.2026 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு, கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்பட்டது:

"1. ***இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 நாட்களுக்குள், பொதுத் தகவல் அலுவலர் / கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை, கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, நாமக்கல் அவர்கள் 14.08.2023 தேதியிட்ட மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரும் இனம் 1,2,7,9,10,13,16-க்கான முழுமையான தகவல்களை சட்டப்பிரிவு 7(6)-இன் கீழ் கட்டணமின்றி, சான்றொப்பமிட்டு, ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவு தபாலில் மனுதாரருக்கு அனுப்பி, அதன் நகலையும், மனுதாரர் தகவலை பெற்றுக்கொண்டதற்கான பதிவு தபால் ஒப்புகை அட்டையின் நகலையும் இணைத்து ஒரு அறிக்கையாக தயார் செய்து, இவ்வாணையத்திற்கு 08.05.2026 அன்று நேரடியாக சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.***
***2. மேற்படி இவ்வாணையத்தின் உத்தரவின்படி தகவல் வழங்க தவறும்பட்சத்தில் முன்னாள்/இந்நாள் பொதுத் தகவல் அலுவலர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 சட்டப்பிரிவு 20(1)-ன் கீழ் ரூ.25,000/- அபராதம் விதிக்கவும், சட்டப்பிரிவு 20(2)-ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் மற்றும் 19(8)(b)-ன்படி மேல்முறையீட்டு இழப்பீடு வழங்குதல் போன்ற தண்டனை நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கவும் நேரிடும் என்று பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடப்படுகிறது.*** "

2. மேற்படி இவ்வாணையத்தின் உத்தரவின்படி, இன்று (08.05.2026) பொதுத் தகவல் அலுவலர் / கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை, க (ம) ப, நாமக்கல் மாவட்டம் அவர்கள் இவ்வாணையத்தின் முன்பு நேரில் ஆஜராகி அறிக்கையை சமர்ப்பிக்கத்

தவறியுள்ளார். இதனை இவ்வாணையம் பதிவு செய்து, கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது:

1. *பொதுத் தகவல் அலுவலர் / கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை, க (ம) ப, நாமக்கல் மாவட்டம் அவர்கள் மீது காரணம் கேட்கும் குறிப்பாணை (Show Cause Notice) கோரப்படுகின்றது. மேற்படியான காரணம் கேட்கும் குறிப்பாணையின் மீதான விளக்கத்தினை சம்மந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலர் / கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை, க (ம) ப, நாமக்கல் மாவட்டம் அவர்கள் 05.06.2026 அன்று இவ்வாணையத்திற்கு நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.*
2. *மேற்படி இவ்வாணையுடன் இணைக்கப்பட்டுள்ள குறிப்பாணையின்மீது பொது தகவல் அலுவலர் / கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை, க (ம) ப, நாமக்கல் மாவட்டம் அவர்கள் 05.06.2026 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி விளக்கம் சமர்ப்பிக்க தவறும்பட்சத்தில், பொது தகவல் அலுவலரிடமிருந்து விளக்கங்கள் ஏதும் பெறப்படவில்லை என இவ்வாணையம் தீர்மானித்து தக்க நடவடிக்கை பரிந்துரை செய்யப்படுமென உத்தரவிடப்படுகிறது.*
3. *மேற்படி இவ்வழக்கின் மீது 06.01.2026 தேதியிட்டு இவ்வாணையத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு 1-இனை செயல்படுத்தி, அதன் அறிக்கையையும் 05.06.2026 அன்று இவ்வாணையத்திற்கு நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலர் / கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை, க (ம) ப, நாமக்கல் மாவட்டம் அவர்களுக்கு உத்தரவிடப்படுகிறது.*

**ஓம்/-ரா.பிரியகுமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 17722/B/2023</u>**

**<u>பெறுநர்</u>**

**<u>பொது அதிகார அமைப்பு:</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
கோட்டப் பொறியளார்,
நெடுஞ்சாலைத்துறை,
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு,
நாமக்கல் மாவட்டம் - 637001.

**<u>மனுதாரர்:</u>**

திரு.M.ராஜசேகரன்,
27/8, கிழக்குத் தெரு,
பொத்தனூர் அஞ்சல்,
பரமத்தி வேலூர் வட்டம்,
நாமக்கல் மாவட்டம் - 638181.

Copy to: File
AK/PC